**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | ஜெய்சங்கர் |
| Father's/Husband Name: | : | செல்வராஜ் |
| Address : | : | 1/214 ஏ, மேற்கு தெரு, காடூர், குன்னம் வட்டம், பெரம்பலூர் |
| Age | : | 40/2023 |

தேதி: 11/07/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.(**எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. இந்த வழக்கின் எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். நானும் எனது மனைவி செல்வராணியும் சேர்ந்து புதுவேட்டக்குடியில் கிருஷ்ணா ஸ்பேர் பாட்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வந்தோம். அந்த கடையின் வியாபாரத்தை விரிவு படுத்துவதற்காக பெரியசாமி என்பவரது மகன் கண்ணன் என்பவரிடம் நான் ரூ.1,50,000/-த்தை ஜீன் 2020 ல் 3% மாத வட்டி அடிப்படையில் கடனாக பெற்றேன். அதற்கு ஆதரவாக ஒரு புரோ நோட்டையும் நான் எழுதி கொடுத்தேன். அதற்கு மாதம் ரூ.4,500/- வட்டியாக செலுத்த வேண்டும். அவ்வாறு நான் செலுத்தி கொண்டிருந்த போது இடையில் அவரது பணம்

வேண்டும் என எதிரி கேட்டார். அதனால், நான் அந்த பணத்தை செலுத்தி விட்டேன். ஆக மொத்தம் அசலும் வட்டியாக ரூ.2,13,000/-த்தை நான் எதிரிக்கு செலுத்திவிட்டேன். பின்பு 07.08.2021 அன்று நான் கடையை திறப்பதற்காக வழக்கம் போல் நானும் எனது மனைவியும் சென்ற போது எங்களுக்கு முன்பாகவே கண்ணன் எனது கடையில் இருந்தார். நான் எனது கடையை திறந்து வியாபாரம் ஆரம்பித்த போது கோவில்பாளையத்தை சேர்ந்த இளஞ்செழியன் என்பவரும் வந்திருந்தார். அவரை தவிர 10 வாடிக்கையாளர்கள் இருந்தனர். அப்போது கண்ணன் என்னிடம் இன்னும் கணக்கு முடிக்கவில்லை எனவும் வட்டியுடன் சேர்த்து ரூ.10,00,000/- செலுத்த வேண்டும் எனவும், எனது பணத்தை செலுத்திவிட்டு கடையை நடத்து எனவும் கூறினார். நான் பணத்தை செலுத்திவிட்டேன் என கூறியதற்கு நான் கொடுத்த பணத்திற்கு சாட்சியாக யாரும் இல்லை என்றும், எனது கடையையும் TN 46 Y 8668 என்ற பதிவெண் கொண்ட எனது மனைவியின் பெயரில் இருந்த சூப்பர் ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தையும் பூட்டி சாவியை எடுத்து கொண்டார். இதற்கு மேல் கடைக்கு அருகில் நின்றால் அடித்து கொன்றுவிடுவேன் என மிரட்டினார். எனது மனைவியையும் சேலையை உருவி முடியை அறுத்து விடுவேன் என மிரட்டினார். மறுபடியும் 11.07.2022 அன்று நான் கேட்ட போது எங்கு வேண்டுமானாலும் போய் சொல்லு கடையை திரும்ப வாங்கமுடியாது எனவும் ரூ.10,00,000/- கொடுத்தால் தான் எங்களது கடையையும் வண்டியையும் தருவேன் என கூறிவிட்டார். இன்று வரை எனது வாகனமும் கடையும் எதிரியின்

கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அதனால் நானும் எனது மனைவியும் பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து குற்றப்பிரிவிற்கு புகாரை அனுப்பினர். அந்த புகாரின் அடிப்படையில் குற்றப்பிரிவு காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Web Copy

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.1 |
| Name | : | செல்வராணி |
| Father's/Husband Name: | : | ஜெய்சங்கர் |
| Address : | : | மேற்கு தெரு, காடூர், குன்னம் வட்டம், பெரம்பலூர் |
| Age | : | 40/2023 |

தேதி: 11/07/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.(**எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். எனக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். இரண்டு மகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது மகன் 7ம் வகுப்பு படித்து வருகிறான். நான் கிருஷ்ணா ஸ்பேர் பாட்ஸ் என்ற பெயரில் புதுவேட்டக்குடியில் கடை நடத்தி வந்தேன்.அந்த கடையின் வியாபாரத்தை விரிவு படுத்துவதற்காக பெரியசாமி என்பவரது மகன் கண்ணன் என்பவரிடம் நான் ரூ.1,50,000/-த்தை ஜீன் 2020 ல் 3% மாத வட்டி அடிப்படையில்

கடனாக பெற்றேன். மாதம் ரூ.4,500/- வட்டியாக செலுத்த வேண்டும். நான் பணத்தை கடனாக பெற்ற பிறகு ரூ.4,500/- வீதம் 14 மாதங்கள் மொத்தம் ரூ.63,000/- வட்டியாக  செலுத்தியுள்ளேன். பின்பு எதிரி அவரது பணத்தை எனது கடைக்கு வந்து திரும்ப கேட்டார். நான் அதனால் ரூ.1,50,000/- அசல் பணத்தை செலுத்தினேன். ஆக மொத்தம்  அசலும் வட்டியாக ரூ.2,13,000/-த்தை நான் எதிரிக்கு செலுத்திவிட்டேன். பின்பு 07.08.2021 அன்று நான் கடையை திறப்பதற்காக வழக்கம் போல் சென்ற போது கண்ணன் எனது கடையில் இருந்தார். அவர் என்னிடம் பணம் கேட்டார். நான் தான் பணத்தை செலுத்திவிட்டேனே என கூறினேன். ஆனால் அவர் அதை கேட்காமல் கொடுத்த பணம் காணாது என கூறி எனது கடையையும் எனது இருசக்கர வாகனத்தையும் பூட்டி சாவியை எடுத்து  கொண்டார். மறுபடியும் 11.07.2022 அன்று எதிரி ரூ.10,00,000/- கொடுத்தால் தான் எனது கடையையும் வண்டியையும் தருவேன் என கூறிவிட்டார். மேலும், பணத்தை கொடுக்கவில்லை என்றால் கொன்றுவிடுவேன் என தேவடியா மவளே என அசிங்கமாக திட்டி மிரட்டினார். அதனால் நான் பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

JM-I, Pblr